Translated by me

A.R.M. ZULFI LL.M., M.HR.,LL.B., JPUM
Attorney at Law, Commissioner for Oaths
Senior Assistant Registrar
(Legal & Documentation)
South Eastern University of Sri Lanka

[ Annex 2(c) ]

இணைப்பு 1

## நீதிமன்றக் கட்டளைகள்

### A. உயர்கல்வி நிறுவனங்களில் பகிடிவதைகளுக்கு எதிராகப் போராடுவதற்கான வழிகாட்டுதல்கள்.

1. உயர் கல்வி நிறுவனம்[1] (உ.க.நி) ஒவ்வொன்றும் பகிடிவதை[2] ஆல் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு வழங்குவதற்கென பாதிப்புற்றோர் ஆதரவுக் குழு (Victim Support Committee) ஒன்றை அமைக்க வேண்டும். இக்குழுவானது கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களின் பிரதிநிதிகள்,[3] தகைமை வாய்ந்த உளநல ஆலோசகர் மற்றும்/அல்லது மருத்துவ உளவியலாளர்,[4] சட்ட அமுலாக்கம், சுகாதாரம் அல்லது சமூக சேவைகள்,[5] போன்ற துறைகளில் அனுபவம் வாய்ந்தவராயிருக்கும் அதேவேளை உ.க.நிறுவனத்திற்குப் புறம்பான சுயாதீனமான நபர், மேலும் கல்வி மற்றும் ஒழுக்காற்று பதிவுகளில் குறைபாடில்லாத மூன்றுக்கு (03) மேற்படாத இறுதி ஆண்டு மாணவர்கள் (குறைந்தது GPA 3.5 மதிப்பெண் கொண்டவர்கள்) போன்றோரை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். இக்குழு உறுப்பினர்கள் குறித்தொதுக்கப்பட்ட நியமமான காலத்திற்கென உ.க.நி பேரவையினால் நியமிக்கப்படுவதுடன்[6] கீழே குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகள் போன்றவைகளை பிரயோகித்தலும், புரிதலும், மேற்கொள்ளுதலும் வேண்டும்:

    a. பகிடிவதையினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அதன் சாட்சிகள் முறைப்பாடு செய்ய/பகிடிவதை தொடர்பான சம்பவங்களை அறிக்கை செய்வதற்கென தினமும் 24 மணித்தியாலங்களும் வாரத்தில் ஏழு நாட்களும் (24/7 எனும் அடிப்படையில்) செயற்படும் அவசர தொலைபேசி இணைப்பு (Hotline)/அழைப்பு மையம் (Call Centre) ஒன்றினை இயங்கச் செய்தல்;

    b. பகிடிவதைகள் தொடர்பாக இக்குழுவிற்கு அல்லது இக்குழுவின் எந்தவொரு உறுப்பினருக்கும் நேரடியாகச் செய்யப்படும் முறைப்பாடுகளை அல்லது பகிடிவதைகள் தொடர்பான சம்பவங்களின் அறிவித்தல்களைப் பெறுதல்;

---

[1] "உயர் கல்வி நிறுவனம்" என்ற பதம், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள அதே கருத்தைக் குறிக்கும்.

[2] "பகிடிவதை" என்ற பதம் 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க உயர்கல்வி நிறுவனங்களில் பகிடிவதை மற்றும் ஏனைய வன்முறைகளை தவிர்ப்பதற்கான சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள அதே கருத்தைக் கொண்டதாக அமையும். சந்தேகங்களை நிவர்த்திக்கும் வகையில் பகிடிவதை என்பது சமூகவலைத்தளங்களில் மற்றும் கணணி தளத்தில் புரியப்படும் பகிடிவதைகளையும் உள்ளடக்கும்.

[3] கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் என்போர் பதவிவழி அங்கத்தவர்கள் (குறிப்பிட்ட உ.க.நிறுவனத்தில் பிரதி உபவேந்தர் ஒருவர் இருப்பின் அவ்வாறான பிரதி உபவேந்தர், மாணவர் விடயங்களுக்குப் பொறுப்பான பிரதிப்பதிவாளர் அல்லது சிரேஸ்ட உதவிப் பதிவாளர் அல்லது உதவிப் பதிவாளர், மேலும் மாணவர் ஒழுக்கக் கட்டுப்பாட்டாளர் - Marshal, அல்லது மாணவர் விடுதிக்காப்பாளர் - Warden, அல்லது மாணவர் விடயங்களுக்கான பிரிவின் பணிப்பாளர் - Student Affair Director அல்லது பிரதம மாணவ ஆலோசகர் - Chief Student Counsellor போன்றோர்) மற்றும் பால்நிலை சமத்துவத்திற்குமான ஒப்புரவுக்கும் நிலையத்தின் (Centre for Gender Equity and Equality) சிபாரிசின் அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறிக்கப்பட்ட அங்கத்தவர்கள் மேலும் உபவேந்தரினால் நியமிக்கப்பட்ட குறிப்பிட்ட எண்ணிக்கையான சிரேஸ்ட விரிவுரையாளர்கள் என்போரைக் கொண்டதாகவிருக்கும்.

[4] உ.க.நி ஆனது ஏலவே மாணவ ஆலோசகர்களைக் கொண்டிருக்கும் போது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாணவ ஆலோசகர்கள் உ.க.நி பேரவையினால் பாதிப்புற்றோர் ஆதரவுக் குழுவிற்கு கூட்டு அடிப்படையில் நியமிக்கப்படலாம். உ.க.நி ஆனது ஏலவே மாணவ ஆலோசகர்களைக் கொண்டிருக்காத போது உ.க.நி. தங்களது உயர்தொழில் சேவைகளை நல்லெண்ண அடிப்படையில் வழங்குவதற்கு விருப்பமான தகைமை வாய்ந்த உள ஆலோசகர்கள் மற்றும்/அல்லது மருத்துவ உளவியலாளர்களை பல்கலைக்கழகத்திற்கு வெளியே அடையாளம் காணலாம்.

[5] அவ்வாறான நபரானவர் பொதுச் சேவையில் அல்லது தனியார் துறையில் சிரேஸ்ட பதவி நிலையை அடைந்து இளைப்பாறியவராயிருத்தல் விரும்பத்தக்கது.

[6] தங்களது நேரத்தையும், அனுபவத்தையும் தன்னார்வ அடிப்படையில் வழங்கத் தயாராகவுள்ள குறிப்பிட்ட உ.க.நிறுவனத்தின் ஓய்வுநிலைப் பேராசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக பழைய மாணவர் போன்றோரும் நியமிக்கப்படலாம்.

c. பகிடிவதை தொடர்பான முறைப்பாடு அல்லது அறிக்கை கிடைத்தவுடன் மிக விரைவாக (குறைந்த பட்சம் 03 நாட்களுக்குள்) நடவடிக்கைகள் எடுத்தல். அந்தவகையில் மாணவர் ஒழுக்கவியலாளர் (Proctor), மாணவர் ஒழுக்கக் கட்டுப்பாட்டாளர் (Marshal), விடுதிக் காப்பாளர் (Warden) அல்லது பாதுகாப்பு அதிகாரிகள் (Security Officers) போன்ற பல்கலைக்கழக உள்ளக உத்தியோகத்தர்களை ஒருங்கிணைத்து இயக்குதல். தேவையான சமயங்களில் சட்ட அமுலாக்க அதிகாரிகளின் உதவியையும் பெறல்;

d. பாதிக்கப்பட்டவர் மேலதிக தொந்தரவு அல்லது அவமானம் பற்றிய எந்தவித பயமுமின்றி விதிமுறையான முறைப்பாட்டைச் செய்யத் தேவையான ஆதரவை வழங்குதல் (முறைப்பாடு அல்லது அறிக்கை குழுவிற்கு வந்த தினத்திலிருந்து குறைந்தபட்சம் 05 வேலை நாட்களுக்குள்);

e. பாதிக்கப்பட்டவரிடமிருந்து பொலிசார் முதன்மை / ஆரம்ப முறைப்பாட்டினைப் பதிவு செய்வதனை இலகுபடுத்துவதற்காக, தேவை ஏற்படின், பாதிக்கப்பட்டவருக்கு பொலிஸ் நிலையம் தவிர்ந்த நடுநிலையான அமைவிடத்தில் மாற்றீடான பாதுகாப்பான இடமொன்றை வழங்குதல்;

f. பகிடிவதை சம்பவங்களைப் பற்றிய முறைப்பாடுகளைச் செய்தல் மற்றும் முறைப்பாடுகளைத் தொடர்ந்து பேணிக்காத்தல் போன்றவற்றின் முக்கியத்துவம் தொடர்பாக பகிடிவதையினால் பாதிக்கப்பட்டவரின் பெற்றோர் அல்லது பாதிக்கப்பட்டவரின் ஏனைய குடும்ப உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்குதல்;

g. பொலிசார் நடத்திய விசாரணைகளின் நிலையை (முறைப்பாடு செய்த தினத்திலிருந்து 14 நாட்களுக்குள்) தொடர்ந்து கண்காணித்தல். மேலும், பாதிக்கப்பட்டவர் முறைப்பாட்டை மீளப் பெற்றால் அவ்விடயம் தொடர்பில் உடனடியாக அறிவிக்கப்படுவதற்கும் உரித்துடையதாதல் வேண்டும்;

h. முறைப்பாடு திரும்ப மீளப் பெறப்பட்ட காரணத்தை ஆராய வேண்டும். அது உ.க.நி உத்தியோகத்தர்கள், மாணவர்கள் அல்லது பிறர் யாராவது முறையற்ற செல்வாக்கு அல்லது அநியாயமான அழுத்தம் கொடுத்ததினால் ஏற்பட்டது என்று தெரிய வந்தால், உடனடியாக மாணவர் ஒழுக்கவியாளருக்கு (Proctor) தெரிவிக்கப்படுதல் வேண்டும். மாணவர் ஒழுக்கவியாளர் உடனடியாக உபவேந்தருக்கு தகவல் தெரிவித்து, சம்பவத்தை விசாரிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்தல்;

i. பொலிசார், பகிடிவதை சம்பவம் தொடர்பான முறைப்பாட்டில், முறைப்பாடு அளித்த தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் புலன்விசாரணையைத் தொடங்கத் தவறினாலோ அல்லது பாதிக்கப்பட்டவர் அல்லது அவரது குடும்பத்தினரை முறைப்பாட்டை மீளப் பெறும்படி முறையற்ற செல்வாக்குச் செலுத்தினாலோ, குழு உடனடியாக உபவேந்தருக்கு தெரிவிக்க வேண்டும். உபவேந்தர் குறிப்பிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்து, அம்முறைப்பாட்டின் பிரதியை சட்ட மா அதிபருக்கும் அனுப்புதல்;

j. போதுமான அனுபவம் கொண்டவராகவும் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் குறித்த உ.க.நி. அமைந்துள்ள மாகாணத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றும் அதே வேளை பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச சட்ட உதவியை வழங்கவும்,[7] நீதி நியாயத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை எளிதாக்கவும் தயாராக இருக்கும் சட்டத்தரணிகளை அடையாளம் காணுதலும், அச்சட்டத்தரணிகள் குழுவின் உதவியை பெறுதலும்;

k. பகிடிவதையால் பாதிக்கப்பட்டவர் அவராகவே தானாக ஏற்கனவே முறைபாடு செய்யாதிருக்கும் சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்ட நபர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பகிடிவதை தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு பகிடிவதையால் பாதிப்புற்றோருக்கான ஆதரவளிக்கும் குழுவின் ஒரு உறுப்பினரும், மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிகள் குழுவிலிருந்து ஒரு சட்டத்தரணியும் இணைந்து குறித்த அந்நபருடன் பொலிஸ் நிலையத்திற்குச் செல்லுதல்;

---

[7] மாற்றீடாக தேவையேற்படும் போது குறிப்பிட்ட விடயத்திற்கேற்றாற் போல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது சட்டத்தரணிகள் குழுவொன்றை வழங்கலாம். அச் சட்டத்தரணிகள் குழுவிலிருந்து உ.க.நி.பகிடிவதை சம்பவங்களுக்கு நல்லெண்ண அடிப்படையில் இலவசமாக சட்ட உதவிகளை பெற்றுக் கொள்ளலாம். உ.க.நி. அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது விடயத்திற்கேற்றாற் போல் சட்டத்தரணிகள் குழுவொன்றை அமைப்பது தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினது உதவியை நாடலாம்.

l. பாதிக்கப்பட்டவர்கள் தேவையான சந்தர்ப்பங்களில் தொழில்முறை ஆலோசனை மற்றும் உளவள சேவைகள் உள்ளிட்ட மருத்துவ சிகிச்சைகளைப் பெறுவதற்கு வசதி செய்தல்;

m. 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்கு உதவி மற்றும் பாதுகாப்பு வழங்குதல் (Assistance to and Protection of Victims of Crime and Witnesss Act, No.10 of 2023) சட்ட விதிகளின் கீழ், பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் பயனடையும்படி ஏற்பாடு செய்தல்;

n. மதிப்பீடு செய்யப்பட்ட பின், பாதிக்கப்பட்டவருக்கு கூடுதல் கற்பித்தல், கல்வி இடைவேளை, கல்வி காலக்கெடு நீடிப்பு போன்ற நலன் மற்றும் நிவாரண நடவடிக்கைகள் வழங்கப்பட வேண்டுமா என்பதை பரிந்துரை செய்தல். இது தொடர்பில் ஏதுவான விதிமுறைகள் மற்றும் ஒழுங்குகளின்[8] அடிப்படையில் செய்யப்பட வேண்டும். இவ்வாறு செய்வதன் நோக்கம் பகிடிவதை காரணமாக ஏற்படும் மன உளைச்சலால் மாணவர்கள் படிப்பை விட்டு இடைவிலகுவதை குறைப்பதாகும்;

o. பாதிக்கப்பட்டவர்கள் உ.க.நிறுவனத்தில் இருந்தால் அவ் உ.க.நிறுவனத்திலும், அவ்வாறில்லாது உ.க.நிறுவனத்திற்கு வெளியில் இருந்தால் உ.க.நிறுவனத்திற்கு வெளியேயுள்ள பொருத்தமான உயர்தொழில் ரீதியான நிபுணர்கள் அல்லது அதிகாரிகளிடமிருந்து தொடர்ந்து தங்கள் பட்டப்படிப்பு முடியும் வரை, உளவள ஆலோசனைச் சேவைகளைப் பெறத் தேவையான வசதிகளை பாதிக்கப்பட்டவர்கள் எல்லோருக்கும் ஏற்பாடு செய்தல்;

p. குழுவின் பணிகளை நிறைவேற்றும் போது, அதன் ஒவ்வொரு உறுப்பினரும் பாதிக்கப்பட்டவரின் தனியுரிமையை (Privacy) மதித்து, இரகசியத்தன்மையைப் பேணுவதை உறுதி செய்தல்;

q. உ.க.நிறுவனத்தின் பகிடிவதைக்கு எதிரான குழுவிற்கு (Anti Ragging Committee) அல்லது / மற்றும் பால்நிலை விடயத்திற்கான பொறுப்பாளருக்கு (Gender Focal Point) பகிடிவதையைத் தடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரைகளைச் செய்தல்.

2. ஒவ்வொரு உ.க.நிறுவனமும் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கிய ஒரு வினைத்திறனுள்ள உள்ளக ஒழுக்க விசாரணை முறைமை (Internal Disciplinary Inquiry Mechanism) ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:

a. 10.02.2011 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 946 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர் ஒழுக்க விதிகளுக்கான பொதுவான வழிகாட்டுதல்கள் மற்றும் அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், மேலும் பகிடிவதை தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட பிற வழிகாட்டுதல்கள் அல்லது உத்தரவுகள் ஆகியனவற்றை கடுமையாகப் பின்பற்றுதல்;

b. புலனாய்வு மற்றும் ஒழுக்க விசாரணை நடைபெறுகின்ற காலத்தில், பாதிக்கப்பட்டவர், குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் எந்தவொரு சாட்சியினதும் ஆள் அடையாளம், தகவல்களின் இரகசியத் தன்மை ஆகியவை இயன்றவரை பாதுகாத்துப் பேணப்படல் வேண்டும். மேலும் முறையான விசாரணை செயல்முறையின் வெளிப்படைத்தன்மை, நம்பகத்தன்மை மற்றும் செயல்திறன் என்பவற்றினை உறுதி செய்வதற்காக அவசியமான நேரங்களில் மட்டுமே தகவல்களின் வெளிப்படுத்துகையானது செய்யப்பட வேண்டும்;

c. விசாரணை நிலுவையில் இருக்கும் காலத்தில், இரு தரப்பினரும் பல்கலைக்கழக வளாகத்தில் கல்வி நடவடிக்கைகளில் பங்கேற்கும்போது, குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் அவசியமெனில் அவர் சார்ந்தோர் எவரும் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியின் அருகில் செல்வதற்கோ அல்லது தொடர்பு கொள்வதற்கோ தடைவிதிக்கும் தடுப்பு உத்தரவுகள் வழங்கப்பட வேண்டும். கிடைக்கும் வளங்களைப் பொறுத்து, விசாரணை நிலுவையில் இருக்கும் போது இரு தரப்பினரும் ஒரே விடுதியை / தங்குமிட வசதிகளைப் பகிர்ந்து கொள்ளாமல்

---

[8] இந்த வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்துவதற்கு தற்போதுள்ள விதிமுறைகள் மற்றும் ஒழுங்குகள் போதுமானதாக இல்லையாயின் உ.க.நிறுவனமானது தற்போதைய விதிமுறைகள் மற்றும் ஒழுங்குகளை திருத்துதல் வேண்டும் அல்லது புதிய விதிமுறைகள் மற்றும் ஒழங்குகளை உருவாக்குதல் வேண்டும்.

இருப்பதனை உறுதி செய்யும் வகையில் நியாயமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3. ஒவ்வொரு உ.க.நிறுவனமும் பகிடிவதை சம்பவம் தொடர்பாக ஒழுக்க விசாரணை நடவடிக்கைகள் நிலுவையில் இருக்கும் மாணவருக்கும் அல்லது விசாரணை முடிவடைந்த போதிலும் கல்வி நிறுவனத்திலிருந்து வெளியேற்றும் கட்டளை ஆக்கப்படாத மாணவருக்கும், உ.க.நிறுவனத்தில் கிடைக்கும் ஆலோசனைச் சேவைகளை அல்லது உ.க.நிறுவனத்திற்கு வெளியேயுள்ள நிபுணர்கள் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஆலோசனைச் சேவைகளைப் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

4. வளங்கள் கிடைக்கின்ற தன்மை மற்றும் தொடர்புடைய அதிகாரிகளிடமிருந்து தேவையான அனுமதிகள் பெறுதல் போன்றவற்றைக் கருத்திற் கொண்டு, ஒவ்வொரு உ.க.நிறுவனமும் மாணவர்களினதும், சொத்துக்களினதும் பாதுகாப்பையும், பாதுகாவலையும் உறுதிப்படுத்துவதற்காக பல்கலைக்கழகத்திலும் மற்றும் விடுதி வளாகத்திலும் பின்வருவனவற்றை உள்ளடக்கிய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் உறுதி செய்யும்:

   a. உரிய உ.க.நிறுவனத்தில் உள்ள இளமானி பட்டப்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கையின் நியாயமான விகிதத்திற்கேற்ப, குறிப்பாக விடுதியில் தங்கும் மாணவர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, போதுமான எண்ணிக்கையிலான ஆண் மற்றும் பெண் மாணவர் ஒழுக்கவியலாளர்கள் (Proctor), மாணவர் ஒழுக்கக் கட்டுப்பாட்டாளர்கள் (Marshal), விடுதிக்காப்பாளர்கள் (Warden) அல்லது பாதுகாப்பு அதிகாரிகள் (Security Officers) மாணவ ஆலோசகர்கள் (Student Counsellor) மற்றும் பிற கல்வி சாரா உதவி உத்தியோகத்தர்களை நியமித்தல்;

   b. விடுதிக்காப்பாளர்கள் மற்றும் உதவி விடுதிக் காப்பாளர்களுக்கு விடுதி வளாகத்திற்குள் போதுமான தங்குமிட வசதிகளை வழங்குதல்;

   c. பல்கலைக்கழக மற்றும் விடுதி வளாகத்திலுள்ள பொது இடங்களை திறம்பட கண்காணிப்பதற்காக, உள்நுழையும் மற்றும் வெளியேறும் இடங்கள், உணவகங்கள், விளையாட்டு மைதானங்கள், உடற்பயிற்சிக் கூடங்கள், நடைபாதைகள் மற்றும் வழித்தடங்கள் (Pathways) போன்ற இடங்களில் CCTV கேமராக்களை நிறுவுதல், அத்துடன் அத்தகைய பகுதிகளில் போதுமான வெளிச்சம் (முன்னுரிமையாக sensor lighting) ஏற்படுத்துதல், CCTV கேமரா மற்றும் வெளிச்ச அமைப்புக்கள் எப்போதும் நன்றாக செயல்படும் நிலையில் இருக்கும் படி முறையாக பராமரிப்பதை உறுதி செய்தல், மேலும் விசாரணைக்கு உதவும் வகையில் பகிடிவதை சம்பவங்களின் CCTV பதிவுகளை சேமித்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்தல்;

   d. அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு (Marshalls, Wardens, Sub-Wardens and Security Officers) இரவு பார்வை கெமராக்கள் (night vision camcorders), குரல் பதிவுகள் (voice recorders), body cameras high beam power torches மற்றும் walkie talkies போன்ற பயனுள்ள தகவல் தொடர்பு சாதனங்களை வழங்குதல்;

   e. விடுதி வளாகங்களில் கட்டுப்படுத்தப்பட்ட நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களை உறுதி செய்தல்[9];

   f. அனுமதியளிக்கப்பட்ட மாணவர்களும் மற்றும் உ.க.நிறுவனத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களும் மட்டுமே விடுதியின் தங்குமிடங்களுக்குச் செல்வதற்கான அனுமதியானது கண்டிப்பாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தல், மேலும் பொருத்தமான அதிகார சபையின் எழுத்துபூர்வ முன்னனுமதியுடனான சந்தர்ப்பம் தவிர மற்ற மாணவர்கள் உட்பட வேறு எந்தவொரு நபர்களும் விடுதியினுள் நுழைவதைத் தடைசெய்தல்;

[9] மாணவர் அடையாள அட்டையில் டிஜிட்டல் கார்டு/பார்கோட் பயன்படுத்தப்படுவது, வினைத்திறனான அடைவுக் கட்டுப்பாடு நோக்கத்திற்காகவெனக் கருதப்படலாம்.

g. குறிப்பாக மாலை 6.00 மணி முதல் காலை 6.00 மணி வரை, பல்கலைக்கழகம் மற்றும் விடுதி வளாகங்களில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் வழக்கமான ரோந்துபணி மற்றும் திடீர் விஜயங்களை மேற்கொள்ளுதல்;

h. தனக்கு கீழ் பணிபுரிபவர்களிடமிருந்து பகிடிவதை தொடர்பான நிகழ்வுகள் குறித்து பருவகால அறிக்கைகளை பெறுமாறு மாணவர் ஒழுக்கவியலாளர் (Proctor), அல்லது மாணவர் ஒழுக்கக் கட்டுப்பாட்டாளர் (Marshal) போன்றவர்களைக் கோருதல், மேலும் அவ்வாறு பெறப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில், அவசர கவனம் மற்றும் உடனடி அறிக்கையினை தேவைப்படுத்தும் சம்பவம் இல்லாவிடின், அச்சம்பவம் தொடர்பில் மாணவர் ஒழுக்கவியலாளர் (Proctor), அல்லது மாணவர் ஒழுக்கக் கட்டுப்பாட்டாளர் (Marshal) போன்றோர் பருவகால அறிக்கையினை தயார் செய்து மாணவர் விவகார இயக்குனர் (Student Affairs Director) அல்லது பிரதி உபவேந்தர் ஊடாக குறிப்பிட்டதொரு பருவகால அறிக்கையினை துணைவேந்தருக்கு சமர்ப்பிக்கக் கோரல்;

i. விடுதி வளாகங்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக தகுதிவாய்ந்த வசிப்பிட பராமரிப்பாளர்களை பணியமர்த்துதல்;

j. பல்கலைக்கழக மற்றும் விடுதி வளாகங்களுக்குள் மது அருந்துவதை முற்றிலும் கண்டிப்பாக தடைசெய்தல்;

k. பாதுகாப்பு மற்றும் பர்துகாவல் (Safety and Security) நடவடிக்கைகள் தொடர்பாக தொடர்ச்சியான தணிக்கைகளை நடாத்துதல்;

l. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு அவசரகால நடவடிக்கைகள், முரண்பாட்டுத் தீர்வு மற்றும் நவீன பாதுகாப்பு நுட்பங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் ஆகியன குறித்த பயிற்சிகளை வழங்குதல், அத்துடன் ஒரு பகிடிவதை சம்பவம் கண்டுபிடிக்கப்படும் போது அல்லது முறைப்பாடு செய்யப் படும் போது பின்பற்ற வேண்டிய தெளிவான நடைமுறைகளை (protocols) உருவாக்கி தீர்மானித்தல்[10];

m. ஒழுங்கமைக்கப்பட்ட பகிடிவதை நிகழ்வுகளின் சாத்தியமான அச்சுறுத்தல்களை முன்கூட்டியே அடையாளம் காணும் நோக்கில், நிபுணர் பயிற்சியின் வழிகாட்டதலுடன் கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களைக் கொண்ட உள்ளகப் புலனாய்வு குழு (Internal Intelligence Force) ஒன்றை அமைத்தல்.

5. ஒவ்வொரு உ.க.நிறுவனமும் மாணவர்களிடையே ஏற்படும் போதைப்பொருள் துஸ்பிரயோக பிரச்சினையை நிவர்த்தி செய்ய பின்வருவனவற்றை உள்ளடக்கிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

a. பல்கலைக்கழக அல்லது விடுதி வளாகங்களுக்குள் போதைப் பொருள்[11]; தொடர்பான எந்தவொரு குற்றமும் இடம்பெற்றால் அருகிலுள்ள பொலிஸ் நிலையம் அல்லது பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்திற்கு உடனடியாக தெரிவித்தல்;

b. தொடர்ச்சியான விழிப்புணர்வு உருவாக்கும் நடவடிக்கைகளை வழங்குவதன் மூலம், போதைப் பொருள் துஸ்பிரயோகத்தின் ஆபத்துக்கள் குறித்து அனைத்து மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்;

c. உ.க.நிறுவனத்தில் பணிபுரியும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பல்கலைக்கழகத்தில் மற்றும் விடுதி வளாகங்களில் போதைப் பொருள் தொடர்பாக வழக்கமான மற்றும் திடீர் சோதனைகளை மேற்கொள்ள அனுமதி அளித்தல்;

---

[10] பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் தொடர்பான பயிற்சி திட்டங்களை நடத்துவதற்கு வசதியாக குறிப்பாக அந்தத் துறையில் நிபுணர்களின் சேவைகளைப் பெறுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உதவியைப் பெறலாம்.

[11] விஷங்கள், அபின் மற்றும் ஆபத்தான ஔடதங்கள் சட்டத்தின் (Poisons, Opium and Dangerous Drugs Ordinance) (திருத்தியவாறு) கீழுள்ள ஒரு குற்றம் அல்லது போதைப் பொருள் துஸ்பிரயோகத்தை தடுப்பது மற்றும் எதிர்த்துப் போராடுவது தொடர்பாக பொருந்தக் கூடிய சட்டம்.

d. போதைப் பொருள் அடிமைத்தன்மையால் பாதிக்கப்பட்டிருக்க கூடிய மாணவர்களை அடையாளம் காணவும், பாதிக்கப்பட்டவர்களை விற்பனையாளர்களிடமிருந்து வேறுபடுத்தி அறியவும், கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்க நிபுணர்களின் உதவியைப் பெறுதல்;

e. போதைப்பொருள் மறுவாழ்வு மையங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட மாணவர்கள் அத்தகைய சேவைகளைப் பெறுவதற்கு ஆதரவு அளித்தல்;

f. போதைப்பொருள் அடிமைத்தன்மைக்கு சிகிச்சை பெற்று வரும் மாணவர்களுக்கு கூடுதல் கற்றல் (extra tutoring), விடுமுறை வழங்குதல் மற்றும் பொருந்தக் கூடிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்[12]; அடிப்படையில் அவர்களின் கல்வி காலக்கெடுவை நீடித்தல் என்பனவற்றின் மூலம் கல்வி இடைவிலகல் விகிதத்தை குறைக்கும் நோக்கில் நலன்புரி மற்றும் நிவாரண நடவடிக்கைகளை வழங்குதல்.

6. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பகிடிவதை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதை எதிர்த்துப் போராடவும்[13] வடிவமைக்கப்பட்ட ஒரு அடிப்படைப் பாடநெறி (Foundation Course) ஒன்றை தயாரிக்க வேண்டும். அப்பாடநெறியானது பின்வரும் தலைப்புகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்:

a. இணையவழி மற்றும் பாலியல் துன்புறுத்தல் உட்பட பகிடிவதை மற்றும் பிற வகையான துன்புறுத்தல் தொடர்பான சட்டம்;

b. பகிடிவதையின் கடுமையான மற்றும் தீங்கான விளைவுகளை விபரித்துக் காட்டுவதற்காக கடந்தகாலத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குற்றம் புரிந்தவர்களின் விடய ஆய்வுகள் மற்றும் அவர்களின் அனுபவப் பகிர்வுகள்;

c. பகிடிவதை மீதான பூச்சிய - சகிப்புத்தன்மைக்கான காரணங்கள் (Reasons for Zero-Tolerance of Ragging) மற்றும் புதிய மாணவர்கள் மாற்றத்தின் முகவர்களாக (agents of change) மாறுவதற்கான கருவிகள்;

d. சிந்தனையின் சுயாதீனத்தினையும் மற்றும் விமர்சன சிந்தனையினையும் வளர்த்தல்;

e. உளநலம் தொடர்பான களங்கத்தை (Stigma) நீக்குதல் மற்றும் நேர்மறை சிந்தனையை உள்ளடக்கிய மன அழுத்தத்தை நிர்வகிப்பதற்கான கருவிகள்;

f. சக மாணவர் ஆதரவு குழுக்கள் (Peer Support Groups) உருவாக்கத்தை ஊக்குவித்தல்;

g. வன்முறையற்ற முரண்பாட்டுத் தீர்வு;

h. போதைப்பொருள் துஸ்பிரயோகம் மற்றும் குடிப்பழக்கத்தை எதிர்த்தல்;

i. இலவசக் கல்வியைப் பெறுவதில் பெருமித உணர்வை உருவாக்குதல் மற்றும் மாணவர்களின் உடல், உள, சமூக மற்றும் கல்வி நல்வாழ்வுக்கு இடையூறு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடாமல், அதன் வாய்ப்புகள் மற்றும் சலுகைகளை முழுமையாகப் பயன்படுத்துவதற்கான கடமையை ஏற்படுத்துதல்;

j. சுற்றியிருப்போரின் தலையீட்டு (Bystander intervention) நுட்பங்கள்.

7. மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படை பாடநெறி (Foundation Course) அனைத்து முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் கட்டாய தேவையாக ஒவ்வொரு உ.க.நிறுவனமும் வழங்க வேண்டும். அதேபோல், சிரேஸ்ட மாணவர்களுக்கு (முதலாம் ஆண்டை முடித்த மாணவர்கள்) மீதமுள்ள அவர்களது கல்வி ஆண்டுகளில் ஆண்டுதோறும் இவை தொடர்பான கட்டாய புத்தாக்க பாடநெறி (Refresher Course) வழங்கப்படல் வேண்டும்.

---

[12] இவ்வழிமுறைகளை நடைமுறைப்படுத்த தற்போது உள்ள விதிமுறைகள் மற்றும் ஒழுங்குகள் போதுமானதாக இல்லாத பட்சத்தில், உ.க. நிறுவனமானது அவற்றைத் திருத்துவதற்கு அல்லது புதிய விதிமுறைகளை அல்லது ஒழுங்குகளை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

[13] இந்த அடிப்படை பாடநெறி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்திற்கான நிலையத்தினால் ஏற்கனவே வடிவமைத்துள்ள எந்வொரு பாடத்திட்டத்திற்கும் கூடுதலாகவும், துணைபாடமாகவும் இருக்க வேண்டும்.

8. வளங்களின் கிடைக்கும் தன்மை மற்றும் தொடர்புடைய அதிகார சபைகளிடமிருந்து தேவையான ஒப்புதல்கள் என்பவற்றினைக் கருத்தில் கொண்டு, மற்றும் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள், குறிப்பாக முதலாம் ஆண்டு மாணவர்கள் மற்றும் சிரேஸ்ட மாணவர்கள் பாட நேரத்திற்கு வெளியே ஒரே இடத்தில் ஒன்று கூடுவதையும் பகிடிவதைக்கு உட்படும் அபாயம் அதிகரிப்பதையும் தடுக்கும் நோக்கில்,

a. ஒவ்வொரு உ.க.நிறுவனமும் பல்கலைக்கழகதத்தின் விடுதி தங்குமிடங்களுக்கு மாற்றீடாக தனியார் விடுதி தங்குமிடங்களை அடையாளம் காணல் வேண்டும் மற்றும் மாணவர்களுக்கான பல்கலைக்கழகத்தின் விடுதி தங்குமிடங்களை குறைக்க வேண்டும்;

b. ஒவ்வொரு உ.க.நிறுவனமும் அடையாளம் காணப்பட்ட தனியார் விடுதி தங்குமிடங்களை குறைந்தபட்ச தரநிலைகளை அடிப்படையாகக் கொண்டு பரிசீலனை செய்து அதனடிப்படையில் பதிவு செய்ய வேண்டும், மேலும் அந்தப் பதிவுகளை மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான தங்குமிடத்தைத் தேர்ந்தெடுக்கக் கூடியவாறு கிடைக்கச் செய்ய வேண்டும்[14];

c. மாணவர்களுக்கான அத்தகைய மாற்றுத் தங்குமிட வசதிகள் அனைத்து முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் கிடைக்காத பட்சத்தில், சாத்தியமான இடங்களில், முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக விடுதி தங்குமிடங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.

9. ஒவ்வொரு உ.க.நிறுவனமும், அதன் பால்நிலை விடயத்திற்குப் பொறுப்பான நிலையத்தினூடாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் மற்றும் தொடர்புடைய நிபுணர்களினதும் உதவியுடன், இணையவெளி (Cyberspace) மற்றும் சமூக ஊடகங்களில் நடைபெறும் பகிடிவதையை தடுப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

a. இணையவெளி பகிடிவதை மற்றும் அதனுடன் தொடர்புடைய செயல்களைத் தடுக்க ஒரு முழுமையான சமூக ஊடகக் கொள்கையை உருவாக்கி, கடுமையாக நடைமுறைப்படுத்துதல்;

b. மாணவர் நலநோம்பல் அதிகாரிகளுக்கு (Student Welfare Staff) இணையவெளி பகிடிவதைகளை அடையாளம் காணும் முறைகள் குறித்து நிபுணர் பயிற்சிகளை வழங்குதல்;

c. பகிடிவதை நிகழ்வுகளை முன்னதாக அடையாளம் காண கண்காணிப்பு மற்றும் நுண்ணறிவு முறைமைகளை அமைத்து, அவற்றை உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தல்;

d. அனைத்து மாணவர்களுக்கும் இணையவெளி பகிடிவதையின் ஆபத்துகள் மற்றும் அவற்றை எவ்வாறு சமாளிப்பது/அறிவிப்பது என்பதில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

10. ஒவ்வொரு உ.க.நிறுவனமும், மாணவர் சங்கங்கள் மற்றும் அல்லது நிறுவனத்திற்குள் உள்ள பிற ஒழுங்கமைக்கப்பட்ட மாணவர் குழுக்கள் பகிடிவதையினை தொடங்கவோ அல்லது ஊக்குவிக்கவோ கூடாது என்பதனை உறுதி செய்ய பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

a. மாணவர் சங்கங்களின் தேர்தல்களிலும், அவர்களின் நிர்வாகப் பதவிகளிலும் பாலின சமத்துவத்தினையும் மற்றும் இன சமநிலையையும் உறுதி செய்தல்,

---

[14] மகப்பொல கல்வி உதவித் தொகைக்கு மேலாக, பதிவு செய்யப்பட்ட தனியார் விடுதிகளில் தங்கும் ஏழை மாணவர்களின் விடுதி வசதிக்கான நிதி ஆதரவு ஒதுக்கப்பட வேண்டும். அத்தகைய விடுதி வாடகைத் தொகை சொத்து உரிமையாளர்களுக்கு, நேரடியாக உ.க.நிறுவனம் மூலம் செலுத்தப்படலாம். இதற்காக, ஒரு மூவகை ஒப்பந்த மாதிரி (Tri-partite Agreement) உருவாக்கப்பட வேண்டும். அந்த ஒப்பந்தத்தில் பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் சேர்க்கப்பட வேண்டும்: மாணவரின் அலட்சியம் அல்லது வேண்டுமென்று செய்த செயல் அல்லது தவறுதல் காரணமாக சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு மாணவர் பொறுப்பேற்க வேண்டும். வீட்டு உரிமையாளர் விடுதியின் போதுமான பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதி செய்ய வேண்டிய கடமையுடையவர் ஆவார். மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாவலை உறுதி செய்வதற்காக, உ.க.நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் விடுதிக்கச் செல்ல வீட்டு உரிமையாளர் அனுமதிக்க வேண்டும்.

மேலும் எழுத்து மூலமான சட்டங்களுக்கு உட்பட்ட வகையில்[15] மாணவத் தேர்தல்களில் போட்டியிடும் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட நியமிக்கப்பட்ட பதவியலாளர் பட்டியலை (List of Nominated Office Bearers) அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பதிலாக ஒவ்வொரு பதவிக்கும் தனிப்பட்ட வேட்பாளர்கள், தனித்தனியாக போட்டியிடக் கூடியவகையில் தேர்தல்களை நடாத்துதல்;

b. மாணவர் சங்கங்களுடன் இணைந்து செயற்பட்டு பகிடிவதையை தடுக்கும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கும் மற்றும் மாணவர்களிடையே நேர்மறை மனோபாவமும் மற்றும் நடத்தை மாற்றங்களையும் உருவாக்குவதற்கும் கூட்டிணைப்புக்களை ஏற்படுத்துதல்;

c. சர்வதேச ரீதியான மதிப்புகள் (universal values), மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மற்றும் சக மாணவர்களுக்கும், பிற மாணவர்களுக்கும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற திறன்களை வளர்க்கும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட தொடர்ச்சியான தலைமைத்துவப் பயிற்சிகளை மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு வழங்குதல்;

d. அனைத்து மாணவர்கள் உட்பட, முதல் ஆண்டு மாணவர்கள் மற்றும் சிரேஸ்ட மாணவர்கள் ஒருவருக்கொருவர் சமமான மரியாதையுடன் நடாத்த வேண்டும் என்ற மாணவர் ஐக்கியத்தை ஊக்குவித்தல்;

e. மாணவர் சங்க பிரதிநிதிகளுக்காக சிறப்பு மாணவர் ஆலோசகர்கள் / வழிகாட்டிகளை நியமித்தல் மற்றும் அவர்களிடையே நட்பு மற்றும் நெருங்கிய தொடர்பை உறுதி செய்தல். இதற்காக, இந்த ஆலோசகர்கள் / வழிகாட்டிகளை உ.க.நிறுவனங்களின் மாணவர் சங்கங்களுக்காக நியமிக்கும் சிரேஸ்ட பொருளாளர்களுடன் இணைந்து செயற்படச் செய்தல்;

f. விடுதிகளில் தங்கும் மாணவர்களையும் உள்ளடக்கிய மாணவர் ஆதரவு குழுக்களை (Students Support Groups) உருவாக்குதல், தொடர்புடைய அதிகார சபைகளால் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் நடவடிக்கைகளுக்கு உதவவும், மேலும் பாதிப்புற்றோர் ஆதரவுக் குழு (Victim Support Committee) மற்றும் பகிடிவதை தடுப்பு குழு (Anti-Ragging Committee) ஆகியவை இவ்வழிகாட்டுக்களின் அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள ஏற்பாடுகளை செய்தல்.

11. ஒவ்வொரு உ.க.நிறுவனத்திலும், முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு அவர்களின் நம்பிக்கை மற்றும் மனவலிமையை வளர்க்கும் தலைமைத்துவப் பயிற்சித் திட்டத்தை அவர்களின் கல்வி நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்பாக அவர்களுக்கான பல்கலைக்கழக அறிமுக நிகழ்ச்சியின் (Orientation Programme) ஒரு பகுதியாக அறிமுகப்படுத்த வேண்டும். பன்முகத்தன்மை (Diversity), ஒப்புரவு (Equity), மற்றும் உள்வாங்குகை (Inclusion) போன்றவற்றின் முக்கியத்துவம் இந்த பயிற்சித் திட்டத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

12. ஒவ்வொரு உ.க.நிறுவனமும் ஒரு மாணவர் குழுவிற்கு ஒரு வழிகாட்டி எனும் அடிப்படையில் நியமிக்கப்பட்டு அவ்வழிகாட்டி அந்த மாணவர் குழுவுடன் தொடர்ச்சியான மற்றும் நெருங்கிய தொடர்பில் இருக்கக் கூடியதான ஒரு வழிகாட்டி திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும். வழிகாட்டியானவர் ஒரு மாணவர் பகிடிவதைக்குச் சார்பான மனப்பாங்கை தொடர்ந்தும் காட்டுவதாக கண்டறிந்தால், அந்த மாணவர் சிறப்பு சேவைகளை பெறுவதற்காக மாணவர் ஆலோசகர் அல்லது ஏதேனும் தகுதியுள்ள தொழில்முறை நிபுணரிடம் அனுப்பப்படல் வேண்டும்.

13. ஒவ்வொரு உ.க.நிறுவனமும் பகிடிவதை தடுப்பு குழு (Anti-Ragging Committee) ஒன்றைத் தாபித்தல் வேண்டும். அக்குழுவானது உபவேந்தரால் நியமிக்கப்பட்ட கல்விசார் உத்தியோகத்தர்களின் பிரதிநிதிகள், உ.க.நிறுவனத்தின் மாணவர் ஆலோசகர்கள்

---

[15] உயர்கல்வி அமைச்சானது பல்கழைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் ஆலோசித்து, இந்த வழிகாட்டுதலை செயல்படுத்த 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கழைக்கழகங்கள் சட்டம், மற்றும் பிற எழுத்துபூர்வ சட்டங்களில் செய்ய வேண்டிய திருத்தங்களை அடையாளம் காண வேண்டும்.

தேவையானால், மற்றும் பாதிப்புற்றோர் ஆதரவு குழுத் தலைவர் போன்ற பதவிவழியான (ex officio) உறுப்பினர்களை உள்ளடக்கியதாக உருவாக்க வேண்டும். இக்குழுவானது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகள் போன்றவைகளை பிரயோகித்தலும், புரிதலும், மேற்கொள்ளுதலும் வேண்டும்:

a. பகிடிவதை தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் மற்றும் மேம்படுத்தும் முறைகளை உருவாக்கி பரிந்துரைகள் செய்தல்;

b. பகிடிவதை தடுப்பு நடவடிக்கைகளின் உருவாக்கத்திலும் நடைமுறைபடுத்தப்படுவதிலும் மாணவர் சங்கங்களின் பங்குபற்றலை உறுதி செய்தல்;

c. பகிடிவதை மீதான பூச்சிய சகிப்புத் தன்மைக் கொள்கையை திறம்பட செயல்படுத்துவதையும் மற்றும் பரப்புவதையும் உறுதி செய்தல்;

d. சமூக ஊடகங்கள் உள்ளிட்ட படைப்பாற்றல் நெறிமுறைகளைப் பயன்படுத்தி பகிடிவதை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்;

e. பகிடிவதை சம்பவங்கள் மற்றும் முறைப்பாடுகளின் முடிவுகளின் புள்ளிவிவரங்களை பராமரித்து, உபவேந்தருக்கு பருவகால அறிக்கைகளை வழங்குதல், உபவேந்தர் அதனை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்புவார்;

f. உள்ளக ஒழுக்காற்று விசாரணைகள் அல்லது நீதிமன்ற வழக்குகள் முடிந்த பிறகு வெளியேற்றப்பட்டவர்களின் அல்லது குற்றவாளிகளின் அடையாளங்களை பொது மக்களுக்கு வெளியிடுதல்;

g. மாணவர்களின் பெற்றோர் மற்றும் குடும்பங்கள் உட்பட, பல்வேறு பங்காளர்களை ஈடுபடுத்தி, சமூகத்தில் பகிடிவதை குறித்த விழிப்புணர்வை வலுப்படுத்தவும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கல்வி செயல்பாட்டை பாதிக்காமல் முறைப்பாடுகளை மேற்கொள்வதையும் பராமரிப்பதையும் ஊக்குவித்தல், அதே போல் பகிடிவதையின் தீவிர விளைவுகள் தொடர்பில் குற்றவாளிகளுக்கு ஆலோசனை வழங்குவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்த வேண்டும்.

14. ஒவ்வொரு உ.க.நிறுவனமும் பகிடிவதை சம்பவத்தை தெரிவிக்க தவறிய அல்லது பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி ஒருவர் முறைப்பாடு செய்வதை / பராமரிப்பதை அல்லது சம்பவம் தொடர்பான புலனாய்வு அல்லது விசாரணைக்கு ஒத்துழைக்காமல் செய்ய தாக்கம் செலுத்தும் அல்லது அவ்வாறு உத்தேசிக்கும் எந்தவொரு கல்விசார் அல்லது கல்விசாரா உத்தியோகத்தருக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

15. பால்நிலை ஒப்புரவு அல்லது சமத்துவத்திற்கான நிலையத்தினூடாக, பாதிப்புற்றோர் ஆதரவு மத்திய குழு (Central Victim Support Committee) ஒன்றை கல்வியியலாளர்கள், தகுதியுடைய ஆலோசகர்கள் மற்றும்/அல்லது மருத்துவ மனோதத்துவ நிபுணர்கள், மருத்துவ தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் ஆகியோரைக் கொண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது உருவாக்கும். குறிப்பாக, ஒரு உ.க.நிறுவனத்தின் பாதிப்புற்றோர் ஆதரவு குழு சிக்கலான வழக்கில் தேவையான ஆதரவை திறம்பட வழங்க முடியாத சூழலில் சேவைகளை வழங்கக்கூடிய வகையில் இக்குழு இருக்கும்.

16. பல்துறை பணிக்குழு (Multi-Disciplinary Task Force) மற்றும் உ.க.நிறுவனங்களுக்கு சென்று பருவகால வாரியாக பகிடிவதை தடுப்பு நிகழ்ச்சிகளை (Periodic Anti-Ragging Programs) நடாத்தும் நபர்களின் வலையமைப்பு (Network of Persons) ஆகியவற்றை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவானது உருவாக்கும். அவ்வாறான பகிடிவதை தடுக்கும் நிகழ்ச்சிகளானது அரங்க நாடகம் (Forum Theatre), கதாபாத்திர நடிப்பு (Role-Playing), கலை நிகழ்ச்சிகள் மற்றும் பிற புதுமையான வடிவங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதையும் உள்ளடக்கியிருக்கும்.

17. இந்த வழிகாட்டுதல்களை செயல்படுத்த தேவையான அனைத்து ஆதரவையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கும், அதாவது ஊழியர் எண்ணிக்கையை அதிகரிக்க தேவையான பாதீட்டு ஒதுக்கீடுகளை உறுதிப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் தொடர்புடைய அனுமதிகள், நிபுணர் பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதில் உதவி செய்தல், பகிடிவதை தடுப்பதில் பயன்படும் அடிப்படை பாடநெறிகளை (Foundation Courses) உருவாக்கவும்,

வடிவமைக்கவும் உதவுதல் மற்றும் உ.க.நிறுவனங்களில் நிகழும் பகிடிவதை சம்பவங்கள் மற்றும் அதற்கான நடவடிக்கைகளின் பயன்திறனை கண்காணித்தல் ஆகியவை உள்ளடங்கும்.

18. வளங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகார சபைகளிடமிருந்து அனுமதிகள் கிடைக்கும் சூழலில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது, உயர்கல்வி அமைச்சுடன் இணைந்து, நிதி உதவி விண்ணப்பங்களை பரிசீலிக்க ஒரு பாதிப்புற்றோர் ஆதரவு நிதியம் (Victim Support Fund) ஒன்றை நிறுவும். இதில், பாதிக்கப்பட்டவருக்கு தேவையான உயர் தொழிலசார் சுகாதார சேவைகள் (உடல் அல்லது உளநல), திறனிழப்பு தொடர்பான சாதனங்கள், பகிடிவதை காரணமாக ஏற்பட்ட குறைபாடுகளுக்கான சிறப்பு கற்றல் சாதனங்கள் அல்லது சிறப்பு வதிவிடம் போன்ற வேறு வகையில் இலவசமாக வழங்க முடியாதவைகள் பரிசீலிக்கப்படும்.

19. ஒரு உ.க.நிறுவனத்தில் சேர்க்கப்படும் ஒவ்வொரு மாணவருக்கும் அவர்களின் கல்வி நடவடிக்கை தொடங்குவதற்கு முன் இந்த வழிகாட்டுதல்களின் ஒரு நகல் வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு உ.க.நிறுவனத்தின் வழிகாட்டும் திட்டத்திலும் இந்த வழிகாட்டுதல்களின் விதிகள் மற்றும் அவற்றை மீறிய சந்தர்ப்பங்களில் கிடைக்கும் தீர்வுகளை உள்ளடக்கிய விழிப்புணர்வு உருவாக்கும் கட்டாய அமர்வு இடம்பெறும். இந்த வழிகாட்டுதல்கள் மற்றும் பகிடிவதையை எதிர்கொள்ளும் பிற முறைகள் மாணவர்களுக்கு சமூக ஊடகங்கள் வழியாக தொடர்ச்சியாக தெரிவிக்கப்பட வேண்டும்.

**B.** 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 135(1)(d) இன் விதிகளின் படி, மேற்கூறிய 1, 2, 3, 4, 5, 7, 8, 9, 10, 11, 12, 13, 14 மற்றும் 19 ஆம் இலக்கங்கள் கொண்ட வழிகாட்டுதல்களை முழுமையாக அமுல்படுத்தப்படும் வகையில், 3[வது], 4[வது] மற்றும் 6A முதல் 21A வரையான சேர்க்கப்பட்ட பிரதிவாதிகளின் கீழுள்ள உ.க.நி. விதிமுறைகளை உருவாக்குமாறு உத்தரவிடப்படுகின்றது.

**C.** மேலே குறிப்பிடப்பட்ட 6, 15, 16 மற்றும் 17 ஆம் இலக்கங்கள் கொண்ட வழிகாட்டுதல்களை அமுல்படுத்த, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 15(xii) இன் கீழ் தனது அதிகாரங்களை பயன்படுத்தி நடவடிக்கைகள் எடுக்க 1[ஆம] பிரதிவாதிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**D.** பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 20(2)(a) விதிகளின் படி, உ.க.நிறுவனங்கள் மேற்கூறிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகிறதா என்பதை விசாரித்து ஒவ்வொரு 6 மாதத்திற்கு ஒரு முறை அறிக்கை தாக்கல் செய்ய 1[வது] பிரதிவாதிக்கு கட்டளையிட 22B பிரதிவாதிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**E.** 22B ஆம் பிரதிவாதி, இவ்வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்தப்படுவதற்குத் தேவையான நிதி, தொழில்நுட்பம் மற்றும் பிற உதவிகள் போன்றனவற்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து விரைவாகக் கிடைக்கப் பெறும் வகையில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடப்படுகிறார்.

**F.** மேலே குறிப்பிடப்பட்டுள்ள உ.க.நிறுவனங்களில் பதவி வகிக்கும் எவரும், பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 33 இன் படி பல்கலைக்கழக உத்தியோகத்தர் உட்பட, மேலே குறிப்பிட்ட விதிமுறைகளின் படி தமக்குக் கிடைத்த அதிகாரங்களைச் செலுத்துவதில், கடமைகளை நிறைவேற்றுவதில், அல்லது பொறுப்புகளைச் செய்வதில் தவறினால், அவர் தொடர்புடைய நியமன அதிகார சபையிடம் அல்லது ஒழுங்காற்று அதிகார சபையிடம், மேலும் 1[வது] பிரதிவாதியிடமும் அறிவிக்கப்பட வேண்டும். அத்துடன், பொருத்தமான எழுத்துபூர்வமான சட்டங்களின் படி, அவர்மீது உரிய ஒழுங்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**G.** 23B ஆம் பிரதிவாதி, இலங்கை பொலிசாருக்குத் தேவையான உத்தரவுகளை வழங்கி, பகிடிவதை சம்பவம் தொடர்பான ஒவ்வொரு விசாரணையிலும், அதனுடன் தொடர்புடைய நீதி தடுப்பு நடவடிக்கைகளிலும் உதாரணமாக, எவரேனும் பொலிஸ் அதிகாரி, பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியாளரை அநியாயமாகத் தாக்கம் செலுத்த முயற்சிக்கும் நிகழ்வுகளிலும் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெறுமாறு உத்தரவிடப்படுகிறார்.

**H.** இவ்வுத்தரவுகள், பிரதிவாதிகளின் அதிகாரத்தின் கீழ் தற்போதைய நடைமுறைகளுக்கு இணையானதாகவும், அவற்றை மேம்படுத்துவதற்கானதாகவும் கருதப்படுகின்றன. எனினும், இந்நடைமுறைகளுக்கும் இக்கட்டளைகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு தோன்றினால், இவ்வுத்தரவுகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.